Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 117 | வெள்ளிக்கிழமை Friday | 27.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஈரோடு, நெல்லை, விருதுநகரில் மினி டைடல் பூங்கா

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்






சென்னை: நெல்லை, விருதுநகர், ஈரோட்டில் ரூ.117.65 கோடியில் மினி டைடல் பூங்கா அமைக்க முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் அடிக்கல் நாட்டினார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க . ஸ்டாலின் காணொளி வாயிலாக நெல்லை, விருதுநகர், ஈரோட்டில் மினி டைடல் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டினார். இந்த நியோ டைடல் பூங்காக்கள் அமைப்பதன் மூலம் 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, ஈரோடு மாவட்டம் கங்காபுரம் கிராமத்தில் ரூ.39.87 கோடியில் நியோ டைடல் பூங்கா அமைக்கப்பட உள்ளது.

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டியில் ரூ.39.06 கோடியிலும்,

விருதுநகர் கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடியிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு ஆகிய இடங்களில் ரூ.117.65 கோடியில் டைடல் நியோ பூங்காக்களை அமைக்க முதல்வர் மு . க . ஸ் டா லி ன் காணொலி மூலம் (வியாழக்கிழமை பிப்.26) அடிக்கல் நாட்டினார்..

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார் பட்டியில் ரூ.39.06 கோடியிலும், விருதுநகர் மாவட்டம் கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடியிலும், ஈரோடு மாவட்டம் கங்காபுரத்தில் ரூ.39.87 கோடியிலும் மூன்று டைடல் நியோ பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தப் பூங்காக்கள் ஒவ்வொன்றும் சுமார் தலா 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் கட்டப்படவுள்ளன. ஒவ்வொன்றும் சுமார் 60,000 சதுர அடி பரப்பில் தரை மற்றும் மூன்று தளங்கள் கொண்டு ஐடி, ஐடிஇஎஸ், பிபிஓ, ஸ்டார்ட்- அப் நிறுவனங்கள் இடம்பெறும் வகையில் கட்டப்படவுள்ளன.

டைடல் நியோ லிமிடெட் எனும் சிறப்பு நோக்கநிறுவனம் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் ஒரு லட்சம் சதுர அடி கட்டுமானப் பரப்புடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்க கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன

.நாகர்கோவிலில் மினி டைடல் பூங்கா அமைக்க முதல்வர் ஸ்டாலின் பிப்ரவரி 25ந்தேதி அடிக்கல் நாட்டினார்.நாகை,கரூர், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, விரைவில் அவற்றின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவிரவாதத்தை ஒருபோதும் இந்தியா சகித்துக் கொண்டதில்லை: இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி: எந்த மூலையில் தீவிரவாதம் இருந்தாலும், அது உலகம் முழுவதும் நிலவும் அமைதியை கெடுத்துவிடும்; எனவேதான் தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியா எந்தவித சமரசத்தையும் செய்து கொள்வதில்லை என இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்தார். பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக இஸ்ரேல் சென்றிருந்தார். இஸ்ரேல் – காசா இடையே போர் பதற்றம் நிலவி வரும் சூழலில், மோடியின் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. நேற்று பென் குரியான் விமான நிலையத்துக்கு சென்ற அவரை, அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது மனைவி சாராவுடன் நேரில் சென்று வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து, அரசு மாளிகைக்கு சென்ற இரு நாட்டு தலைவர்களும் நீண்டநேரம் ஆலோசனை நடத்தினர். இதையடுத்து, நேற்று மாலை இஸ்ரேல் நாடாளுமன்றத்திற்கு சென்ற பிரதமர் மோடி, அங்கு இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

அவர் பேசுகையில், "இஸ்ரேல் மண்ணில் மீண்டும் நான் காலடி எடுத்து வைத்ததும், எனது உள்ளத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது. அதே சமயத்தில், இஸ்ரேலில் கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலை நினைத்து என் மனம்வேதனைஅடைந்தது.

அன்றைய தினம் நடந்த கொடூர தாக்குதலில் தனது அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வலியை நாங்கள் (இந்தியர்கள்) உணர்கிறோம். உங்கள் சோகத்தை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். எந்த தருணத்திலும் இஸ்ரேலுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்பதை இங்கு உறுதியுடன் கூறிக்கொள்கிறேன். ஒரு நாட்டின் குடிமக்கள் கொல்லப்படுவதை யாராலும் நியாயப்படுத்த முடியாது. இந்தியாவும் மிகநீண்டகாலமாக தீவிரவாத தாக்குதலின் வடுக்களை சுமந்து நிற்கும் ஒரு நாடு என்ற முறையில், உங்கள் வலிகளை எங்களால் புரிந்து கொள்ள முடியும். 26/11 மும்பை தாக்குதலில் இஸ்ரேல் குடிமக்கள் உட்பட பல அப்பாவி உயிர்கள் பறிபோனதை இந்த தருணத்தில் நினைவுகூருகிறேன்.

எனவேதான், இஸ்ரேலை போலவே இந்தியாவும் தீவிரவாதத்துக்கு எதிராக எந்த சமரசமும் செய்து கொள்ளாத நாடாக இருக்கிறது. தீவிரவாதம் எந்த ரூபத்திலும் வந்தாலும் அதை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது. தீவிரவாத விஷயத்தில் எந்த இரட்டை நிலைப்பாட்டையும் இந்தியா எடுப்பதில்லை.

தீவிரவாதம் மனித சமூகத்தையே சீர்குலைக்க முயல்கிறது; வளர்ச்சியை தடுக்கிறது. உலகின் எந்த மூலையில் தீவிரவாதம் இருந்தாலும், அது அனைத்து நாடுகளிலும் உள்ள அமைதியை கெடுத்துவிடும். எனவே தீவிரவாதத்தை எதிர்த்து நாம் போராட வேண்டியது அவசியம். அதற்கு உலக நாடுகளின் நீடித்த மற்றும் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இதன் காரணமாகவே, தீவிரவாதத்துக்கு எதிராக எந்த நாடு முன்னெடுப்பை எடுத்தாலும், அதில் இந்தியாவும் தனது பங்களிப்பை வழங்குகிறது.

காசா அமைதி நடவடிக்கைக்கு இந்தியா தனது முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. இது இஸ்ரேல் - பாலஸ்தீனம் பிரச்சினைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் என நான் நம்புகிறேன். அமைதியை நோக்கிய பயணம் எளிதானது அல்ல. ஆனால், உங்களின் (இஸ்ரேல்) எல்லா முயற்சிகளிலும் இந்தியா உடன் இருக்கும்.

தீவிரவாதத்துக்கு எதிரான இஸ்ரேலின் துணிச்சலுக்கும், உறுதியான நிலைப்பாட்டுக்கும் இந்தியாவில் தனி மரியாதை உள்ளது. சுதந்திரத்துக்கு பின்னர், இஸ்ரேலியர்களை தங்கள் உறவினர்களாகவே இந்தியா நினைத்து பழகி வருகிறது.

குஜராத்தின் நவாநகர் மன்னரான ஜாம் சாகேப், திக்கற்று தவித்த யூத குழந்தைகளுக்கும், போலந்து குழந்தைகளுக்கும் அடைக்கலம் கொடுத்தது வரலாறு. எனவே, ஜாம் சாகேப்பின் சிலை இஸ்ரேலில் நிறுவப்படவுள்ளது என்பதை கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன்" என பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதை





சென்னை:

மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் முழு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் சுதந்திர போராட்ட வீரருமான நல்லகண்ணு நேற்று வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 101. சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர்,

அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலகினர் என அனைவரும் நல்லகண்ணு உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து, மலர் வளையம் வைத்து மறைந்த நல்லகண்ணு உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். பின்னர், 72 குண்டுகள் முழங்க 24 காவலர்கள் 3 முறை வானத்தை நோக்கி சுட்டனர். முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைவர்கள் நல்லகண்ணுக்கு 'வீர வணக்கம்' செலுத்தினர்.

நல்லகண்ணு இறப்புக்கு பிறகு தன்னுடைய உடலை மருத்துவமனைக்கு தானமாக வழங்க விருப்பம் தெரிவித்திருந்தார். இந்நிலையில், நல்லகண்ணுவின் உடல் அவரது விருப்பப்படி சென்னை சென்ட்ரலில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு தானமாக ஒப்படைக்கப்படுகிறது. நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சங்கரன்கோவிலில் தரமான வாறுகால் அமைக்காவிட்டால் தேர்தலை புறக்கணிப்போம்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஓடைத்தெரு அருகே



குட்டித் தெரு அமைந்துள்ளது. 25வது வார்டுக்கு உட்பட்ட இப்பகுதியில் 60 வீடுகள் அமைந்துள்ளது. வாருகால்அமைக்க கோரி அப்பகுதி மக்கள் நேற்று காலை திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது பற்றி அப்பகுதி மக்கள் கூறியதாவது:- இங்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட வாறுகால் குறுகிய அளவில் இருந்ததால் மழைக்காலங்களில் தண்ணீர் வீடுகளுக்கு சென்று விடுகிறது. மேலும் இங்குள்ள

வாறுகால் சுத்தம் செய்யப்படாமல் உள்ளது.இதனால் இப்பகுதியில் உள்ள முதியவர், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோருக்குநோய் பரவும் அபாயம் உள்ளது. தரமான வாறுகால் அமைக்க கோரி பலமுறை நகராட்சி நிர்வாகத்திடம் புகார் கூறியும் எந்த பலனும் இல்லை. ஓட்டு கேட்பதற்கு மட்டும் வருகிறார்கள்.அதன் பிறகு இப்பகுதியை அரசியல்வாதிகள் மறந்து விடுகிறார்கள். தரமான வாறுகால் அமைக்காவிட்டால் வருகின்ற சட்டமன்ற தேர்தலை நாங்கள் புறக்கணிப்போம்.

இவ்வாறு அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். தரமான வாறுகால் அமைக்க கோரி பொதுமக்கள் மற்றும் பெண்கள் திரண்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



அமைச்சர் .பி.மூர்த்தி, மதுரை அறிவுரைக் குழுமத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள்,உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் எஸ். பாஸ்கரன் மற்றும் எஸ்.ஆனந்தி ,மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் மதுரை அறிவுரைக் குழும அலுவலக புதுப்பிக்கப்பட்ட தரைத்தள கட்டடத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

# மார்ச் 10ஆம் தேதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் அதுவும் பொதுமக்கள் பெருந்திரளாக புழங்கக்கூடிய இடங்களில் மாடுகள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக நடந்து கொண்டிருக்கிறது

தொடர்ச்சியாக இந்த மாடுகளால் பல்வேறு பட்ட விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன பல்வேறு உயிர்களை அது காவு வாங்கி உள்ளது ஆகவே மாநகராட்சி நிர்வாகமானது உடனடியாக பொதுமக்களுக்கு நோட்டீஸ்கள் விளம்பரங்கள் மூலம் பொது மக்களுக்கு அறிவித்து மாடுகளின் சொந்தக்காரர்கள் தங்களது மாடுகளை அவர்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்து வளர்த்துக் கொள்ள வேண்டும் பொது மக்களுக்கு இடைஞ்சலாக சாலையோரங்களிலோ அல்லது பொதுமக்கள் புழங்கக்கூடிய சந்தைகள் மற்றும் பகுதிகளில் வந்தால் உடனடியாக அதனை பிடித்து அபராதம் விதிக்கப்படும் மீண்டும் அதே உரிமையாளரின் மாடுகள் வந்தால் அவைகள் நிரந்தரமாக கோசலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்

மாநகராட்சி நிர்வாகமானது உடனடியாக பொதுமக்களுக்கு விளம்பரங்கள் மூலம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் பத்து தினங்களுக்குள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக மாடுகள் சாலையோரங்களில் அல்லது பொதுவா மக்கள் பூழங்கக்கூடிய இடங்களில் மாடுகளின் நடமாட்டம் இருந்தால் வரக்கூடிய மார்ச் மாதம் பத்தாம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சி முன்னெடுக்கும் இஸ்லாமிய சனநாயக பேரவை மாவட்ட அமைப்பாளர் முஜீப் ரகுமான் தலைமையில் மாநகராட்சி அலுவலகம் முன்பு காலை 11 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார். மார்ச் 10ஆம் தேதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் அதுவும் பொதுமக்கள் பெருந்திரளாக புழங்கக்கூடிய இடங்களில் மாடுகள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக நடந்து கொண்டிருக்கிறது

தொடர்ச்சியாக இந்த மாடுகளால் பல்வேறு பட்ட விபத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன பல்வேறு உயிர்களை அது காவு வாங்கி உள்ளது ஆகவே மாநகராட்சி நிர்வாகமானது உடனடியாக பொதுமக்களுக்கு நோட்டீஸ்கள் விளம்பரங்கள் மூலம் பொது மக்களுக்கு அறிவித்து மாடுகளின் சொந்தக்காரர்கள் தங்களது மாடுகளை அவர்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்து வளர்த்துக் கொள்ள வேண்டும் பொது மக்களுக்கு இடைஞ்சலாக சாலையோரங்களிலோ அல்லது பொதுமக்கள் புழங்கக்கூடிய சந்தைகள் மற்றும் பகுதிகளில் வந்தால் உடனடியாக அதனை பிடித்து அபராதம் விதிக்கப்படும் மீண்டும் அதே உரிமையாளரின் மாடுகள் வந்தால் அவைகள் நிரந்தரமாக கோசலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்

மாநகராட்சி நிர்வாகமானது உடனடியாக பொதுமக்களுக்கு விளம்பரங்கள் மூலம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் பத்து தினங்களுக்குள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக மாடுகள் சாலையோரங்களில் அல்லது பொதுவா மக்கள் பூழங்கக்கூடிய இடங்களில் மாடுகளின் நடமாட்டம் இருந்தால் வரக்கூடிய மார்ச் மாதம் பத்தாம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சி முன்னெடுக்கும் இஸ்லாமிய சனநாயக பேரவை மாவட்ட அமைப்பாளர் முஜீப் ரகுமான் தலைமையில் மாநகராட்சி அலுவலகம் முன்பு காலை 11 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டார்.

# திமுக சார்பில் செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிட விருப்பு மனு தாக்கல்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள மோகல்வாடி கிராமத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முனைவர் க.கலியுக கண்ணதாசன். அவர்கள் சென்னையில் அமைந்துள்ள தலைமை கழகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் செங்கல்பட்டு பொது தொகுதியில் போட்டியிட விருப்ப மனு மற்றும் கட்டணத் தொகையாக ரூபாய் 25 ஆயிரம் செலுத்தி விருப்ப மனு தாக்கல் செய்தார் அருகில் திமுக கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தாம்பரம் அடுத்த வண்டலூர் பகுதியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாளை காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கஜா என்கிற கஜேந்திரன் அவர்களின்தலைமையில் அண்ணா தொழிற்சங்க காட்டாங்குளத்தூர் ஒன்றிய செயலாளர் செங்குட்டுவன் முன் நிலையில் காட்டாங்குளத்தூர் வர்த்தக அணி துணைச் செயலாளர் மாவீரன் ஏற்பாட்டில் கோலப்போட்டி நடைபெற்றது அதனைத் தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை விருந்தளித்து நல உதவி திட்டங்களை வழங்கினர் இதில் 500க்கும் மேற்பட்ட அதிமுகவினர் கலந்து கொண்டனர் மேலும் கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

# அச்சிறுப்பாக்கம் அருகே திமுக தெற்கு ஒன்றியம் சார்பில் துண்டுபிரசுரம் விநியோகம்





மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம்சார்பில்ஒரத்தி ஊராட்சியில் காஞ்சிபுரம் தெற்குமாவட்டசெயலாளர் க,சுந்தர் எம்.எல்.ஏ அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற முழக்கங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் பரப்புரை அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு தலைவர் ஒரத்தி.கே. கண்ணன் தலைமையில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஓ.பி.சி மாறன் முன்னிலையில் வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் அணியினர் ஒருங்கிணைந்து வீடு வீடாக சென்று திராவிட மாடல் ஆட்சியின் பல்வேறு மக்களுக்கான திட்ட பணிகளை முன்னுறுத்தி தேர்தல் பரப்புரை மேற்கொண்டனர் உடன் கட்சியின் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் மொடச்சூர் சாலை, பச்சைமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்திக்கு நேற்று மாசி 14ஆம் தேதி வியாழக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பகல் 1 மணி குரு ஓரையில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், மலர் அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது.ஏராளமான பக்தர்கள் விரதமிருந்து குரு வழிபாடு செய்தனர். நிறைவாக பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மணிமங்கலம் அருகே தனியார் பஸ் டிரைவரை துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த தொழிலதிபர், அவரது மகன் கைது

## துப்பாக்கியை பறிமுதல் செய்து போலீசார் தீவிர விசாரணை



அர்ஜுன்



தேவதாஸ்

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் மணிகண்டன்(27).இவர் காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஹூண்டாய் தொழிற்சாலையில் பணியாளர்களை அழைத்துச் செல்லும் பணியாளர்களை அழைத்துச் செல்லும் பஸ் டிரைவராக வேலை செய்து வருகிறார். சென்னை வண்டலூரில் இருந்து பணியாளர்களை பஸ்ஸில் ஏற்றி கொண்டு வாலாஜாபாத் வண்டலூர் சாலையில் படப்பை நோக்கி வந்த கொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்த கார் ஒன்று ஹாரன் அடித்த படி பின் தொடர்ந்து வந்துள்ளது.

சிலநிமிடங்களில்அந்த கார் பேருந்தை முந்தி சென்று பேருந்து வழிமறித்து நின்றது. காரில் இருந்து இறங்கிய சென்னை கொளத்தூரை சேர்த்த அர்ஜுன், அவரது தந்தை தேவதாஸ் ஆகிய இருவரும் மணிகண்டனிடம் காருக்கு வழிவிடாமல் சென்றதாக வாக்குவாதம் செய்தார்.

மணிகண்டன் சாலையில் தடுப்புகள் வைக்கப்பட்டு மழை நீர் கால்வாய் பணி நடைபெறுவதால் வேகமாக இயக்க முடியாமல் வாகனத்தை ஓட்டியதாக தெரிவித்துள்ளார் இருப்பினும் சமாதானம் அடையாத தந்தையும் மகனும்

ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றிய நிலையில், அர்ஜுன் மற்றும் மணிகண்டனுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அந்த சமயத்தில் ஆத்திரமடைந்த தேவதாஸ் (75), காரில் வைத்திருந்த கை துப்பாக்கி எடுத்து, மணிகண்டனுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மணிகண்டன், அங்கிருந்து சமாதானமான சென்ற பிறகு, உடனடியாக இது குறித்து 100க்கு புகார் தெரிவித்தார். இதன் அடிப்படையில் அங்கு வந்த மணிமங்கலம் போலீசார், அர்ஜுன் ஓட்டி வந்த கார், மற்றும் அவரது தந்தையையும் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்தனர்.

மேலும் தேவதாஸ் இடமிருந்து கை துப்பாக்கியை பறிமுதல் செய்தனர். போலீஸ் விசாரணையில், தேவதாஸ்,தொழிலதிபர் என்பதும் அர்ஜுன் ஐடி நிறுவனத்தில் வேலை செய்து வருவதும் தெரிய வந்துள்ளது.

இருவரும் காரில் காஞ்சிபுரத்தில் வாங்கிய நிலத்தை பார்வையிட சென்றபோது இந்த செயலில் ஈடுபட்டு உள்ளனர் என போலீசார் தெரிவித்தனர் . மேலும் அவர் வைத்திருந்த துப்பாக்கிக்கு உரிய உரிமம் பெற்றுள்ளார் இருப்பினும் கொலை மிரட்டல் விடுத்த தேவதாஸ் மற்றும் அவரது மகன் அர்ஜுன்தேவர்மீதும்வழக்கு பதிவு செய்து சிறைக்கு அனுப்பும் நடவடிக்கையில் மணிமங்கலம் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பீச்ரோடு சந்திப்பில் உள்ள வலம்புரிவிளை குப்பை கிடங்கில் இருந்து வடிகால் ஓடை மற்றும் கழிப்பறை கழிவுகள் சாலையில் பல நாட்களாக வழிந்தோடி தேங்கி உள்ளதை கண்டித்து அப்பகுதி மக்கள் திடீரென சாலை மறியல்மேலும் சாலை செல்லும் கழிவுகளால் சுகாதாரத் கேடு ஏற்படுவதோடு,வலம்புரிவிளை குப்பைக்கிடங்கால் துர்நாற்றத்தால் மூச்சு திணறல் போன்ற பிரச்சினைகளும் ஏற்படுவதாக குற்றச்சாட்டு இதனால் வலம்புரிவிளை திடக்கழிவு மேலாண்மை திட்ட மையம் முன்பு போராட்டம் இதனால் போலீசார் பேச்சுவார்த்தை.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G. தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் "ஸ்ரீஅன்னை ஜேகேகே சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு துறைத்தலைவர் பேராசிரியர் P ஆறுச்சாமி எம்.ஏ.,பி.எட்., அவர்களின் நீண்ட கால கல்வி மற்றும் சமூகத்தின் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளி வாசிப்பை சுவாசிப்போம் திட்டத்தில் சிறப்பாக பங்கேற்றதை பாராட்டி ரூ.7000 மதிப்பிலான புத்தகங்களை பரிசாக இதயம் நிறுவனம் பள்ளி தேடி வந்து வழங்கி பாராட்டியது. இதயம் நிறுவனத்தின் பணியாளர் ஆனந்த் பள்ளி தலைமை ஆசிரியர் லெ . சொக்கலிங்கம் வசம் புத்தகங்கள் அடங்கிய பெட்டியை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலமாக இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில்

# திண்டல் வேலாயுதசாமி திருக்கோயிலில் திருச்சுற்றின் உட்பகுதியில் மங்களூர் ஓடு கொண்டு நிழற்கூரை அமைக்கும் பணிக்கு அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டிவைத்தார்

வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (26.02.2026) ஈரோடு, திண்டல், அருள்மிகு ஸ்ரீ வேலாயுதசுவாமி திருக்கோவிலில் ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சுற்றின் உட்பகுதியில் மங்களூர் ஓடு கொண்டு நிழற்கூரை அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொது மக்களின் நலனுக்காகபல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டினை முன் மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்கள். மேலும் அனைத்து தரப்பினருக்கும்எல்லாதிட்டங்களும் சென்றடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அந்த வகையில் திண்டல், அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயிலில் ரூ.93 இலட்சம் திருச்சுற்றின் உட்பகுதியில் மங்களூர் ஓடு கொண்டு நிழற்கூரை அமைக்கும் பணிக்கும் அடிக்கல் நாட்டி வைத்துள்ளார்.



திண்டலில் அமைந்துள்ள அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயிலிலானது 100 ஆண்டுகளுக்கும் முற்பட்ட பிரசித்திப் பெற்ற முருகன் திருக்கோயிலாகும். இத்திருக்கோவிலுக்கு ரூ. 5 கோடி மதிப்பீட்டில் புதிதாக ஐந்து நிலை இராஜகோபுரம், மலைக்கு செல்ல படிவழிப் பாதை, சிவன், அம்மன், விநாயகர், பைரவர், பாலமுருகன் உள்ளிட்ட சன்னதிகள்மற்றும்நுழைவாயில் போன்றவை அமைக்கப்பட்டு 22.02.2026 அன்று சிறப்பாக திருக்கோயில் இராஜகோபுரம் மற்றும் அனைத்து சன்னதிகளுக்கும் குடமுழுக்கு விழாநடைபெற்றது.இத்திருக்கோயிலில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் 207 அடி உயர மிகப்பெரிய முருகன் சிலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக, சிவகிரி. தலையநல்லூர், அருள்மிகு பொன்காளியம்மன் திருக்கோயிலில் ரூ.5.25 கோடி ஐந்து நிலை இராஜகோபுரம் அமைக்கும் பணிக்கும். ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் புதிய நிறுத்தமண்டபம்கட்டும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி வைத்துள்ளார். மேலும், ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார். ஈரோடு மாநகராட்சி துணை மேயர், வே.செல்வராஜ், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் சுகுமார், திண்டல் முருகன் கோவில் செயல் அலுவலர்ஜீவலட்சுமி.கோவில் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# தேனியில் 13 வயது சிறுமிக்கு உயிர்காக்கும் அபூர்வ அறுவை சிகிச்சை மூலம் மதுரை அப்போல சிறப்பு மருத்துவக்குழு சாதனை

தேனி மாவட்டத் சேர்ந்த 13 வது ச சிறுமி சில நாட்களுக்கு முன்பு தேனி காயத்திரி மெடிக்கள்செண்டரில் மதுரை அப்போல் சிறப்பு மருத்துவ மனையின் இரப்பை மற்றும் குடலியல் பாதிப்பு மற்றும் வளர்ச்சி இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ள என மருத்துவர் குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாதிரியான நோய் பாதிப்புகள் உலகம் முழுவதும் சுமார் 300 பேருக்கு மட்டும் பாதிப்பு உள்ளதாக மருத்துவ நிகில் திவாரி பேசுகையில் சிக்கலான நோய்களையும் நவீன தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ நிபுணத்துவத்தைக் கொண்டு குணப்படுத்துவதில் மதுரை அப்போல முன்னிலையில் உள்ளது என கூறினார்



குறைபாடு,சுவாசிப்பதில் சிரமம் காரணமாக சிகிச்சைக்காக வந்து உள்ளார். இந்நிலையில் சிறுமி பரிசோதனை செய்த டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன்.மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு பரிந்துரை செய்துள்ளார்.

இந்நிலையில் மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிறுமிக்கு கான்ட்ராஸ்ட் சிடி ஸ்கேன் மூலம் சிறுமிக்கு அபெர்னெதி மால்ஃபார்மேசன் என்ற மிக அபூர்வமான நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளன .இந்நிலையில் கல்லீரலுக்குச் சென்து சுத்திகரிக்கப்பட வேண்டிய இரத்தம் ஒரு அசாதாரண இரத்த நாள இணைப்பு காரணமாக கல்லீரலை தவிர்த்து ( By Pass) நேரடியாக இதயத்திற்கு செல்லுவதால் குழுவினர் செய்தியாளர் களுக்கு பேட்டியில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அறுவை சிகிச்சை மேற்கொண்ட இரப்பை மற்றும் குடவியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன் கூறுகையில் அபெர்னெதி மால்ஃபார்மேஷன் என்பது மிகவும் அரிதான ஒன்று இதற்குதுல்லியமான திட்டமிடல் மற்றும் நுணுக்கமான அறுவை சிகிச்சை அவசியம். எனவே சரியான நேரத்தில் சிறுமியின் பாதிப்பு கண்டறியப்பட்டு சிறுமியில் கல்லீரலுக்கு செல்லும் இரத்தை ஒட்டத்தை சீரமைத்து சிருமிக்கு எதிர்காலத்தில் ஏற்படகூடிய சிக்கல்களை தவிர்க்க முடிந்தது என தெரிவித்தார்.

அப்போலோ மருத்துவமனையின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் மேலும் மருத்துவச் சேவைக்கான இணை இயக்குனர் டாக்டர் கே பிரவீன் ராஜன் கூறுகையில் சிறந்த மருத்துவக் கட்டமைப்பும் பல துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பும் இது போன்ற வெற்றிக்கு காரணமாக உள்ளன என கூறினார். இந்த செய்தியாளர் சந்திப்பில் அல்போலோ மருத்துவமனை இணை இயக்குனர் டாக்டர் கே. பிரவீன் ராஜன், தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் நிகில் திவாரி, டாக்டர் ஸ்ரீனிவாசன் ராமசந்திரன், மற்றும் டாக்டர் மதுசூதனன், டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இது போன்ற சிசிச்சைக்கு மதுரை அப்போலோ மருத்துவமனையை தொடர்பு கொள்ளவும் என மருத்துவ குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# ஈரோட்டில் காங்கிரஸ் பேரியக்கம் சீற்றம்: மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

மத்திய அரசு, அமெரிக்க ஒப்பந்தம் மூலம் இந்திய விவசாயிகளையும் நாட்டு மக்களையும் வஞ்சிப்பதோடு, இந்திய நாட்டை மீண்டும் அடிமையாக்க நினைக்கும் துரோகப் போக்கைக் கண்டித்து, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் தலைவர் பா.ராஜேஸ் ராஜப்பா தலைமையில் நேற்று எழுச்சியான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லம் எதிரே நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், நூற்றுக்கணக்கான தொண்டர்கள் திரண்டு மத்திய அரசுக்கு எதிராக அதிரடி முழக்கங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்டத் தலைவர்கள் ஈ.பி.ரவி, டி. திருச்செல்வம், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ. மாரியப்பன், எம். ஞானதீபம், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், INTUC மாநில பேரவை பொருளாளர் எம். துரைசாமி, மண்டலத் தலைவர்கள் மாமரத்துபாளையம் எஸ். கோபி, ஆர்.



விஜயபாஸ்கர், எச்.எம். ஜாபர் சாதிக் ஆகியோர் தலைமையில் தொண்டர்கள் திரண்டனர்.

மாவட்ட மற்றும் அணி நிர்வாகிகள்:

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத்தலைவர்கள் கே. புனிதன், சி. பாஸ்கர்ராஜ், கே.எஸ். செல்வம், ஜே.பி. கோதண்டபாணி,பாபு(எ) வெங்கடாஜலம், ஈஸ்வரமூர்த்தி, மற்றும் பொதுச்செயலாளர்கள் டி. கண்ணப்பன், வி.கே. சச்சிதானந்தம், இரா. கனகராஜன், கராத்தே யூசுப்,ஏ.சி.சாகுல் அமீது, எம்.என். கதிர்வேல்,ஏ. அன்பழகன் ஆகியோர் பங்கேற்றனர்.

வட்டாரத் தலைவர் எம்.ஆர். நட்ராஜ், மாவட்ட பொருளாளர் மோகன்ராஜ், முன்னாள் நகரத் தலைவர் குப்பண்ணா சந்துரு, கே.ஜே. டிட்டோ, ஊடகப்பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், சிறுபான்மை துறை தலைவர் இப்ராஹிம், துணைத் தலைவர் கே.என். பாஷா, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் ஈ.ஆர்.எஸ்.பிரகாஷ், மற்றும் நாடார் மேடு முகமது இர்ஷாத், சபீர் அகமது,மாவட்டசேவாதளம் தலைவர் எஸ். முகமது யூசுப், சூரம்பட்டி விஜயகுமார், இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் விஜய கண்ணா, முன்னாள் எஸ்.சி பிரிவு தலைவர் கே.பி.சின்னசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மகிளா காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் ஆர். கிருஷ்ணவேணி, ஸ்டோனி பிரிட்ஜ் ராணி, செல்வி ரவி, நசியனுர், ஆர். லோகநாயகி மற்றும் மாநகர் மாவட்ட தலைவி அன்னபூரணி இளைஞர் காங்கிரஸ் தரப்பில் மாநகர் மாவட்ட தலைவர் சித்தோடு எஸ். பிரபு, சிட்டி கல்கி,மற்றும் கலைப்பிரிவு ஜாபர் அலி ஆகியோர் திரளாகப் பங்கேற்றனர்.

இவர்களுடன் பெரியார் நகர் சூரஜ்,ராஜாஜிபுரம் பி.குமரேசன்,வாட்டர் சிவாஜி, யுவ கிருஷ்ணன், நசியனுர் சுப்பிரமணி,மாது,சூளை மாதேஷ், சூரம்பட்டி நாகராஜ், ஜெயகோபி, ஆட்டோ பழனிசாமி, ஆட்டோ ஈஸ்வரன், பூமரங் துரை,பிரபாகரன்,55-வது வார்டு பி. செல்வம், டக்கர் செல்வம், நெசவாளர் அணி மண்டல தலைவர்ஸ்வீட்கனகராஜன், அன்பழகன், முன்னாள் மண்டலத் தலைவர் அல்டிமேட் தினேஷ், நரிப்பள்ளம் ரவிச்சந்திரன், சித்தோடு செந்தில், சித்தோடு ரவி, நசியனூர் ராஜரத்தினம், வெல்டிங் கணேசன், கனகராஜ், அருண், விஜயராகவன், சூரம்பட்டி சேகர், துரைராஜ், நல்லி செல்வம், தாலுகா பிரபு, பச்சையப்பன் அண்ணாச்சி, செங்கோடம்பள்ளம் பாஸ்கரன், கே. மாரசாமி, எம். கிருஷ்ணமூர்த்தி, வி.ஆர். சிவகுமார், ஆர். கணேசன், சூரம்பட்டி கே. பழனிசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மோடி அரசின் கொள்கைகளுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினர்.

# தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டத்தில் 2026,27ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு மதிப்பீட்டிற்கான பட்ஜட்டை தாக்கல்

தூத்துக்குடியில் மாநகராட்சி அலுவலகத்தில் மாமன்ற கூட்டம் ஜெகன் பெரியசாமி தலைமையில் ஆணையர் பிரியங்கா, துணைமேயர்ஜெனிட்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டம் தொடங்கியதும், தூத்துக்குடி மாநகராட்சியின் 2026 – 27 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு அறிக்கையை மேயர் தாக்கல் செய்தார். அதில், 2026 – 2027 சொத்து வரி இதர வரி மற்றும் வரியிலா இனங்கள் மூலமாக 3802.39 லட்சம் முத்திரை கட்டணம் மற்றும் கேளிக்கை வரியாக ரூ 600.00 இலட்சம் அரசு மணியம் மற்றும் மாநில பகிர்மான நிதியாக ரூ 7714.00 இலட்சம் 15வது நிதி குழு மானியமாக ரூ 1000.00இலட்சம்ஏனைய வருமானங்கள் மூலமாக ரூ 4581.03 இலட்சம் ஆக



மொத்தம் ரூ 17697.42 இலட்சம் வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதில் நடப்பு ஆண்டிற்கான 2026 – 27 சம்பளம் ஒய்வூதியம மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பானசெலவினங்களுக்கு ரூ.8276.75 இலட்சம், நிர்வாகசெலவினங்களுக்கு ரூ817.25 இலட்சம் சாலை கட்டிடங்கள் மற்றும் இதர பராமரிப்பு இயக்க செலவினங்களுக்கு ரூ.6824.00 இலட்சம் நிதி மற்றும் திட்டமிட்ட செலவினங்களுக்கு ரூ.280.65 இலட்சம் பொது நிதி பங்களிப்புக்காக ரூ1200.00 இலட்சம் என ஆக மொத்தம் 17398.65 இலட்சம் செலவாகும் என உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளது இதில் ரூ 298.77 இலட்சம் உயிராக வருமானம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று மேயர் தெரிவித்துள்ளார்

பின்னர் மேயர் ஜெகன் பெரியசாமி தூத்துக்குடி மாநகராட்சி முழுவதும் வளர்ச்சிப் பணிக்கான 45 அறிவிப்புகளை வெளியிட்டார். விவிடி சிக்னல் முதல் 4ஆம் கேட் வரை சாலை அகலப்படுத்தி நடை பாதைகள் ஒழுங்குபடுத்தப்படும். மாநகரின் பிரதான சாலைகள் ரகமத் நகர், டூவிபுரம் 5, பிரையண்ட் நகர் 1, கடற்கரை சாலை, பக்கிள் ஓடை அணுகு சாலை ஆகியவற்றில் மோட்டார் இல்லாத போக்குவரத்தினை ஊக்கப்படுத்த பிரேத்யேக வழித்தடம் அமைக்கப்படும். நடைபாதைகளில் பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கும் சாலையோர விற்பனைகளை தவிர்க்க விற்பனை மண்டலங்கள் அமைக்கப்படும் என்பது உட்பட45 அறிவிப்புகளை வெளியிட்டார்.



தேனிமாவட்டம்,பெரியகுளம்வட்டம்,வடுகபட்டியில்பாஜக.,தெருமுனைப்பிரச்சாரபொதுக்கூட்டம்நடைபெற்றது. இதில் தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் பி. ராஜபாண்டியன் , அதிமுக தலைமை கழக பேச்சாளர் சுந்தரபாண்டியன், சிறப்புரையாற்றினார்கள். மாநில செயலாளர் M.வசந்த் பாலாஜி தலைமை வகித்தார். ஒன்றிய தலைவர் P.முத்தையா, ஒன்றியபொதுச்செயலாளர்M. ராமகுரு, அ.தி.மு.கசெயலாளர்M. பாலமுருகன்தேனி மாவட்ட இளைஞரணி பொதுச்செயலாளர் திரு.முனியாண்டி, மற்றும் பாரதிய ஜனதா கட்சி அதிமுக கூட்டணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர் .



ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில் ஈரோடு மாவட்டம் பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்மூத்த தலைவர் நல்லகண்ணு அவர்களின் திருஉருவப்படத்திற்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி திமுக நிர்வாகிகளுடன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இந்த நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் , கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை அடுத்துள்ள பண்ணாரி அம்மன் கோயில் குண்டம் விழா வருகிற மார்ச் 31ஆம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி கோயிலில் பந்தல் நடும் விழா 25.02.2026 அன்று நடைபெற்றது.அதனை தொடர்ந்து குண்டம் விழா வரும் மார்ச் 16ஆம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்குகிறது. இதையொட்டி கோயில் வளாகத்தில் பந்தல் நடும் விழா தீவிரமாக நடைபெற்று வருகிறது.



ஈரோடு மாவட்டம் தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி, அம்மன் கோவில் முதல் கணக்கம்பாளையம் வரை முதலமைச்சரின் கிராமப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய தார் சாலை அமைக்கப்படுகிறது. ரூ. 14.13 லட்சம் மதிப்பிலான இப்பணியை அந்தியூர் எம்.எல்.ஏ ஏ.ஜி. வெங்கடாசலம் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டம் நம்பியூர் மேற்கு ஒன்றியம், சுண்டக்காம்பாளையம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் 8 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இந்தப் புதிய கட்டிடத்தை திமுக நம்பியூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் எம்.எஸ். சென்னிமலை நேற்று திறந்து வைத்தார்.இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள்,மாணவமாணவியர்மற்றும்மாவட்ட,ஒன்றிய,கிளைக்கழகநிர்வாகிகள்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.

# சுதந்திரச்சுடர் தோழர் நல்லகண்ணுக்கு ஈரோட்டில் காங்கிரஸ் பேரியக்கம் சார்பில் மலரஞ்சலி



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக, நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகச் செம்மல், மறைந்த தோழர் நல்லகண்ணு அவர்களது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமையில், நேற்று ஈ.வி.கே. சம்பத் சாலையில் இந்த நெகிழ்ச்சியான அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்ச்சியில்முன்னாள்மாவட்டத் தலைவர்கள் ஈ.பி. ரவி, டி. திருச்செல்வம், ஈ.ஆர். ராஜேந்திரன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ. மாரியப்பன், எம். ஞானதீபம், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி,தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன்,INTUC மாநில பேரவை பொருளாளர் எம்.துரைசாமி, மண்டலத் தலைவர்கள் மாமரத்துபாளையம் எஸ்.கோபி,ஆர். விஜயபாஸ்கர், எச்.எம். ஜாபர் சாதிக்

மாவட்ட மற்றும் அணி நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் மாவட்ட துணைத் தலைவர்கள் கே. புனிதன், சி. பாஸ்கர்ராஜ், கே.எஸ். செல்வம், ஜே.பி. கோதண்டபாணி, பாபு (எ) வெங்கடாஜலம், ஈஸ்வரமூர்த்தி, மற்றும் பொதுச்செயலாளர்கள் டி. கண்ணப்பன், வி.கே. சச்சிதானந்தம், இரா. கனகராஜன், கராத்தே யூசுப்,ஏ.சி. சாகுல் அமீது, எம்.என். கதிர்வேல், ஏ. அன்பழகன்,

வட்டாரத் தலைவர் எம்.ஆர்.நட்ராஜ்,மாவட்ட பொருளாளர் மோகன்ராஜ், முன்னாள் நகரத் தலைவர் குப்பண்ணா சந்துரு, கே.ஜே. டிட்டோ, ஊடகப்பிரிவுதலைவர் ம. முகமது அர்சத், சிறுபான்மைதுறைமாநகர் மாவட்ட தலைவர் H K.இப்ராஹிம், துணைத் தலைவர் கே.என்.

பாஷா,ஈரோடுமாவட்ட காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் ஈ.ஆர்.எஸ். பிரகாஷ், நாடார் மேடு முகமது இர்ஷாத், குளம் சபீர் அகமது, மாவட்ட சேவாதளம் தலைவர் எஸ். முகமது யூசுப், சூரம்பட்டி விஜயகுமார், இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் விஜயகண்ணா, முன்னாள் எஸ்.சி பிரிவு தலைவர் கே.பி. சின்னசாமி

மகிளா காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் ஆர். கிருஷ்ணவேணி, ஸ்டோனி பிரிட்ஜ் ராணி, செல்வி ரவி, நசியனுர் ஆர். லோகநாயகி மற்றும் மாநகர் மாவட்ட தலைவி அன்னபூரணி,இளைஞர் காங்கிரஸ் தரப்பில் மாநகர் மாவட்ட தலைவர் சித்தோடு எஸ். பிரபு, சிட்டி கல்கி, மற்றும் கலைப்பிரிவு மாவட்டத் தலைவர் ஜாபர் அலி,பெரியார் நகர் சூரஜ், ராஜாஜிபுரம் பி. குமரேசன், வாட்டர் சிவாஜி, யுவ கிருஷ்ணன், நசியனூர் சுப்பிரமணி, மாது, சூளை மாதேஷ், சூரம்பட்டி நாகராஜ், ஜெயகோபி, ஆட்டோ பழனிசாமி, ஆட்டோ ஈஸ்வரன், பூமரங் துரை, பிரபாகரன், 55-வது வார்டு பி. செல்வம், டக்கர் செல்வம், நெசவாளர் அணி மண்டல தலைவர் ஸ்வீட் கனகராஜன், அன்பழகன், முன்னாள் மண்டலத் தலைவர் அல்டிமேட் தினேஷ், சித்தோடு செந்தில்,சித்தோடு ரவி, நசியனூர் ராஜரத்தினம், வெல்டிங் கணேசன், கனகராஜ், அருண், விஜயராகவன், சூரம்பட்டி சேகர், துரைராஜ், நல்லி செல்வம், தாலுகா பிரபு, பச்சையப்பன் அண்ணாச்சி, செங்கோடம்பள்ளம் பாஸ்கரன், கே. மாரசாமி, எம். கிருஷ்ணமூர்த்தி, வி.ஆர். சிவகுமார், ஆர். கணேசன், சூரம்பட்டி கே. பழனிசாமி, நரி பள்ளம் ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



ஈரோடு மாவட்டம் பெரிய கொடிவேரி அடுத்த டி.ஜி.புதூர், வாணிபுத்தூர், கொங்கர் பாளையம் மற்றும் வினோபா நகர் பகுதிகளில் தமிழக வெற்றிக் கழகத்தினர் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர். அக்கட்சியின் மண்டல தேர்தல் கண்காணிப்பாளர் EX.எம்பி சத்தியபாமா, பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்களை வழங்கி 'விசில்' சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டு வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு. க .ஸ்டாலின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக திண்டல் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஸ்கூல் பேக் ,மற்றும் நோட் புக் , பிளேட் ஆகியவற்றை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி .சி. சந்திரகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் திண்டல் குமாரசாமி, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் திருமதி வீரமணி ஜெயக்குமார், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம்,மாநகரக் கழக செயலாளர் மு. சுப்ரமணியம்,பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, வி.சி நடராஜன், வில்லரசம்பட்டி முருகேசன், மாமன்ற உறுப்பினர் கீர்த்தனா பிரவீன், வட்ட கழக செயலாளர் தமிழரசன், சரவணன் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.